தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 15-5-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்களுக்கான மேலாண்மைப் பயிற்சி**

தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனம், ஹைதராபாத் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் இணைந்து "வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்களுக்கான மேலாண்மைப் பயிற்சி" என்ற தலைப்பில் மூன்று நாள் பயிற்சி மே மாதம், 11 -13 தேதிகளில் 2015-ல் நடைபெற்றது.

பயிற்சியின் தொடக்க விழாவில், முனைவர் கு. ராமசாமி துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர் விக்ரம்சிங், இயக்குநர், தேசிய வேளாண் விரிவாக்க மையம், முனைவர் ஹெ. பிலிப், விரிவாக்கக் கல்வி இயக்குநர் மற்றும் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கர்நாடகா மாநிலத்தில் இருந்து வந்திருந்த முப்பத்திரண்டு வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள் தனது தொடக்க உரையில், இந்த பயிற்சியின் வாயிலாக தன்னாற்றல் மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கினார். மேலும், தொழில்நுட்பப் பரிமாற்றமானது பொறியியல் துறையில் 12 விழுக்காடாகவும், மருத்துவத்துறையில் 7 விழுக்காடாகவும் உள்ளது. ஆனால், வேளாண் துறையில் தொழில்நுட்பப் பரிமாற்றம் 32 விழுக்காடாக உள்ளது. இந்தியாவில், சாகுபடி நிலமானது, 37 விழுக்காடாகக் குறைந்துள்ள போதிலும், 272 மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் காய்கறிகள், 262 மெட்ரிக் டன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியா 7 முக்கியமான உணவுப்பொருட்களின் உற்பத்தியில் முதலிடம் வகித்த போதிலும், வேளாண் பொருட்களை ஏற்றுமதி செய்வதில், சற்று பின்தங்கிய நிலையில் உள்ளது. வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்கள் தொழில்நுட்ப மேம்பாடு, கல்வி புகட்டல், காப்புரிமை மற்றும் விவசாயிகளுக்குத் தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்தல் போன்றவற்றில் தங்கள் தன்னாற்றல் திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என ஊக்குவித்தார். புற உருவெடுத்தலில் சுய மேம்பாட்டின் பங்கு பற்றியும் வலியுறுத்தினார்.

முனைவர் ஹெ.பிலிப் தனது முகவுரையில், எந்த ஒரு பணியிலும், நாம் முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும். ஏந்த ஒரு கடந்த கால மற்றும் வருங்காலம் பற்றிய

எண்ணங்களில் கவனத்தை சிதற விடாமல் பயிற்சியில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட்டால் பயிற்சியின் முழு பயனைப் பெற முடியும் என்றும் வலியுறுத்தினார்.

தனிமனிதனுடைய வெற்றி மற்றும் உயர்வாற்றலில், சுய மேலாண்மை மற்றும் மனிதர்களுக்கிடையே யான உறவு முக்கிய பங்காக விளங்குகிறது. முனைவர் விக்ரம்சிங் தனது உரையில், இப்பயிற்சியில் சம அளவில் பெண் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டதைக் குறிப்பிட்டுப் பேசினார். மேலும், அவர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒரு முதன்மை நிறுவனமாகத் திகழ்வதால், தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனம் இதனுடன் இணைந்து பல பயிற்சிகளை வருங்காலத்தில் நிகழ்த்தவும் ஆவல் தெரிவித்தார்.

ஆளமை வளர்ச்சி, நிதிநலம், கற்கும் முறைகள், சுய மேலாண்மை, மனவெழுச்சி, அறிவான்மை, குழுக்கட்டமைப்பு, தலைமைப்பண்பு மற்றும் நபர்களிடையேயான உறவு பற்றிய பல்வேறு தலைப்புகளில் மூன்று நாள் பயிற்சி நடைபெற்றது.

நிறைவு விழாவில் ஆனந்தகுமார், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைவர் விக்ரம்சிங் மற்றும் முனைவர் ஹெ.பிலிப் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பதிவாளர் தனது உரையில் தற்போதுள்ள பணி சூழ்நிலையில் மன அழுத்ததை எதிர்கொள்ள பயிற்சிகள் மிகவும் இன்றியமையாதது. மேலும் அவர் H.M.T-அதாவது உடல்நலம் - Health, நிதிநலம் - Money மற்றும் காலமேலாண்மை- Time மேற்கொள்ளவும் வலியுறுத்தினார்.

பயிற்சியில் கலந்து கொண்டோர் பயிற்சியின் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட போது இது போன்ற பயிற்சிகள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பதை வலியுறுத்தினர். மேலும், அவர்கள் இந்தப்பயிற்சியின் வெற்றி கருத்துக்களை உள்வாங்கி அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற தாக்கத்தை ஏற்படுத்தியதாகக் கூறினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்